# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.231/2021

**28.07.2025**

## P.W.1- ஜெயராமன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் டிரைவரர் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு தினமும் ரூ.1000 முதல் ரூ.1500 வரை வருமானம் கிடைக்கும். எனது சொந்த ஊர் ஆரியப்பட்டி ஆகும். நான் வட்டித்தொழில் எதுவும் செய்யவில்லை. ஆரியப்பட்டிக்கும், அல்லிக்குண்டத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். எனது பூர்வீக சொத்துக்கள் எல்லாம் ஆரியபட்டியில் தான் உள்ளது. அல்லிக்குண்டத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். அல்லிக்குண்டத்தில் எனக்கு சொந்தக்காரர்கள், சொத்துக்கள் இல்லையென்றால் சரிதான். எனக்கு ஹரிகிருஷ்ணனை தெரியும். பாலுவை தெரியாது. ஹரிகிருஷ்ணனை வைத்து தான் பிரதிவாதியை தெரியும் என்றால் சரிதான். ஹரிகிருஷ்ணன் எனக்கு சொந்தமில்லை, பழக்கமானவர். அவரது அப்பா பெயர் தெரியாது. நான் சொத்து கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சர்வே எண் பற்றி தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட சொத்து அமைந்துள்ள இடத்தினை பார்த்துள்ளேன். மேற்படி இடத்தின் நான்கு மால் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்து பிரதிவாதியின் கிரைய சொத்து ஆகும். நான் 19.04.2018ல் கிரைய ஒப்பந்தம் முடித்தேன். மேற்படி ஒப்பந்தம் போடும்போது அன்றைய சந்தை மதிப்பு தெரியுமா என்றால் ஹரிஷ் மூலம் விற்பனைக்கு வந்ததால் ஒப்பந்தம் செய்தேன். சந்தை மதிப்பு தெரியாமல் சொத்தை கிரையம் வாங்குவேனா என்றால் பார்த்து தான் வாங்குவேன். பிரதிவாதியிடம் வட்டிக்கு தான் பணம் கொடுத்ததால் தான் சந்தை மதிப்பை பார்க்காமல் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் 2 வருட காலத்திற்குள் ரூ.50,000த்தை கொடுக்கும் போது கிரையம் பதிந்து கொடுக்க வேண்டும் எனவும், ரூ.2 லட்சம் கொடுத்த பின்பு ரூ.50,000த்திற்கு 2 வருட கால அவகாசம் எதற்கு கேட்டேன் என்றால் நான் 2 மாதம் தான் கேட்டேன். பிரதிவாதி தான் வெளியூர் செல்வதால் 2 வருட கால அவகாசம் கேட்டார். கிரையம் முடிப்பதற்கு பிரதிவாதியிடம் அறிவிப்பாக அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை, நேரடியாக கேட்டேன். தேதி, மாதம் சொல்ல முடியாது என்றால் சரிதான். 09.09.2021ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது எனது வழக்கறிஞர் படித்து காண்பித்துவிட்டு தான் அனுப்பினார். மேற்படி அறிவிப்பில் நான் எந்த தேதியில் பிரதிவாதியிடம் கிரையம் பதிந்து கொடுத்து கேட்டதாக தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 18.04.2020ற்குள் வழக்கு தாக்கல்

செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் 09.09.2021ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியை வற்புறுத்தி வட்டிக்காக கொடுத்த பணத்திற்கு வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா தற்போது பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் வாங்கவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுத்ததால் தாவா சொத்தின் விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வட்டி செலுத்தினார் என்றால் சரியல்ல. பிராதில் பாரா 2ல் கோவிட் காரணமாக நடமாட்டம் இல்லையென்பதால் அந்த உத்தரவின் பேரில் பதிவாளர் அலுவலகம் முறையாக செயல்படவில்லை, பிரதிவாதி காலம் தாழ்த்தி வருகிறார் என வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வட்டிக்காக கொடுத்த பணத்திற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.28 17:52:20 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.